இணைந்து ஜெபிப்போம்!　　இணைந்து பணியாற்றுவோம்!!



# ஆசிரியரின் அருளுரை

திருக்கல்யாணத் தாய் இதழின் ஆர்வமிக்க வாசகர்களே!உங்கள் அனைவருக்கும் என் மனங்கனிந்த ஆசிகளையும், வாழ்த்துக்களையும் அன்புடன் வழங்கி மகிழ்கின்றேன்.

இந்த தவக் காலத்தில் நம் ஆன்மா, உடல் ஆகியவற்றை தூய்மையாக்கி இறைவனுக்கு ஏற்ற காணிக்கையாய் படைப்பது கிறிஸ்தவர்களாகிய நமது கடமையாகும். நம்மிடமுள்ள குற்றங்களை, குறைகளை எண்ணிப்பார்த்து மனம் வருந்தி இறைவனுக்கு ஏற்புடைய மக்களாய் நம்மை நாமே புதுப்பித்துக் கொள்ளும் வேளை இது. இறைவன் நமக்காக ஏற்றுக் கொண்ட பாடுகளை, துயரங்களை எண்ணிப் பார்த்து நன்றியறிந்த உள்ளத்தோடு அவரோடு ஒப்புரவாகி புதிய மனிதர்களாய் மாறுவோம்.

தேர்வுக்காக மாணவச் செல்வங்கள் முழு முயற்சியோடு தாயரிக்கும் போது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுப்போம்..

உயிர்ப்புப் பெருவிழாவை வரவேற்போம். சாவை வென்று உயிர்த்த நம் ஆண்டவர் உலகம் முடிவு வரை நம்மோடு இருக்கிறார். எனவே நம்பிக்கையோடு அஞ்சாமல் மகிழ்ச்சியாக வாழ்வோம். மற்றவர்களையும் வாழவைப்போம். திருக்கல்யாண அன்னையின் ஆலயம் வந்து அன்னையைத் தரிசித்து வேண்டிய வரங்களை கேட்டுப் பெறுவோம். அன்னையின் புகழை அகிலமெல்லாம் பரப்புவோம்.

இயேசுவுக்கே புகழ்!　　இயேசுவுக்கே நன்றி!!

அன்புடன்

**பங்குத் தந்தை**

பொத்தக்காலன்விளை.



# உலகத் திருச்சபை செய்திகள்

## குழந்தை இயேசுவுக்கு எழுதிய செபம்

1934 ஆம் ஆண்டு தற்போதைய திருத்தந்தை சிறுவனாக இருந்தபோது குழந்தை இயேசுவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். இந்தக் கடிதத்தில் எழுதிய செபத்தில் திருப்பலி செபப்புத்தகமும், திருப்பலியில் குருக்கள் அணியும் ஆடைகளும் பரிசாகத் தாரும் என்று விண்ணப்பித்திருந்தார். ஏழு வயது சிறுவனாக இருக்கும் போது அவர் எழுதிய செபம் இது. குழந்தை இயேசுவே விரைவாக உலகிற்கு வாரும். எனக்கும் என்னைப் போன்ற குழந்தைகளுக்கும் மகிழ்வைக் கொண்டுவாரும் என்று இச்செபம் அவர் பிறந்து வளர்ந்த இன்றோவிக்னே என்னும் ஜெர்மனியில் உள்ள ஊரிலுள்ள வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கடிதம் இணைய தளத்தில் இப்போது பார்யைார்களுக்குக் கிடைக்கும்.

## புனித பூமியின் அமைதிக்காக 3000 நகரங்களில் செபங்கள்

மூவாயிரத்துக்கும் மேற்பட்ட நகரங்களில் புனித பூமியின் அமைதிக்காக ஜனவரி 27 ம் தேதியன்று செபங்கள் நடத்தப்பட்டன ,புனித பூமியின் அமைதிக்காக 24 மணி நேரங்கள் இடமபெற்ற இந்தச் செப வழிபாடுகளில் 2012 ம் ஆண்டைவிட இவ்வாண்டில் மேலும் 500 நகரங்கள் இணைந்துள்ளன .போலந்தின் நாத்சி வதைப்போர் முகாம் விடுதலை அடைந்த 1945 ம் ஆண்டு ஜனவரி 27 ம் நாளே புனித பூமியின் அமைதிக்காகச் செபிக்கும் நாளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## அன்னையின் பரிந்துரையில்...


இயேசு உயிர்த்தெழுந்த காட்சிகளிலும் அவரின் திருப் பாடுகள் மற்றும் மரணம் பற்றிய நிகழ் வுகளிலும் பெண்களின் பங்கு முக்கிய மானதாக இருந்ததாக நற்செய்தியில் நாம் வாசிக்கிறோம் என்றுரைத்த திருத்தந்தை 16ம் பெனடிக்ட், நம்பிக்கை மற்றும் அமைதியின் ஊற்றாகிய உயிர்த்த ஆண்டவரின் உயிருள்ள பிரசன்னத்தை நாமும் அனுபவிக்க அன்னை மரியின் பரிந்துரையை நாடுவோம் என்றும் அவர் கூறினார்.அன்னையின் பரிந்துரையால் உயிர்த்த ஆண்டவரிடம் நாம் சென்றடைவோம்.

## கருவில் வளரும் குழந்தைகளுக்கு செபம்

கருவில் வளரும் குழந்தையை எதிர்பார்த்திருக்கும் பெற்றோருடன்அவர்களைச் சுற்றியுள்ள பங்குச் சமுதாயமும் அக்குழந்தையை எதிர்பார்க்கிறது என்பதை கருத்தில் கொண்டு கருவில் வளரும் குழந்தைக்கு ஆசீர் வழங்கும் வழிமுறை என்ற செபங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த செபங்களுக்கு வத்திக்கானின் திருவழிபாட்டு ஆணையமும் தனது ஒப்புதலை வழங்கியுள்ளது. உலகின் பல இடங்களில் இவ்வாண்டு மே மாதம் 13ம் தேதி கொண்டாடப்பட்ட அன்னையர் தினத்தன்று ஆங்கிலத்திலும் இஸ்பானிய மொழியிலும் வெளியிடப்பட்ட இந்தச் செபங்கள் அடங்கிய ஏடு அமெரிக்காவில் உள்ள அனைத்து பங்குக் கோவில்களிலும் வழங்கப்படும் என்று கர்தினால் டேனியல் கூறினார்.

–நன்றி : வத்திக்கான் வானொலி

## மறை மாவட்ட செய்திகள்



✷ 01.02.2013 அன்று காலை வீரபாண்டிய பட்டணத்தில் ஆயர் அவர்கள் தலைமையில் நூற்றாண்டு விழா கொண்டாட்ட திருப்பலி நடைபெற்றது. அன்று மாலை தூத்துக்குடி நற்செய்தி நடுவ பணியாளர்களுடன் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆயர் அவர்கள் உரையாடினார்கள்.

✷ 02.02.2013 அன்று பொத்தகாலன்விளை திருக்கல்யாணமாதா திருத்தல முதல் சனி சிறப்பு வழிபாட்டு சிறப்பு திருப்பலி மேதகு .ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது .அன்று மாலை பூச்சிகாடு திருவிழா சிறப்பு மாலை ஆராதனை மேதகு. ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

✷ 03.02.2013 அன்று காலை பூச்சிகாடு ஆலய திருவிழா திருப்பலியும், உறுதிபூசுதலும் அன்று மாலை திருச்செந்தூர் பங்கு குருவானவர் இல்லத் திறப்பு விழா திருப்பலியும் ,மேதகு .ஆயர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

✷ 11.02.2013 அன்று மாலை தூத்துக்குடி லூசியா நிறுவன நிர்வாக குழுகூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

✷ 12.02.2013 அன்று காலை மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்கள் கூட்டம் மேதகு. ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

✷ 13.02.2013 அன்று சாம்பல் புதன் திருப்பலி கதீட்ரல் ஆலயத்தில் மேதகு. ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது


✷ 14.02.2013 அன்று காலை மறை மாவட்ட கல்விக்குழு கூட்டமும், மாலை மறைமாவட்ட நிதிக்குழு கூட்டமும் மேதகு. ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதன் பின் யேசுராஜபுரம் பங்கு கலியாவூர் பதிய பள்ளிக் கட்டிடம் மேதகு . ஆயர் அவர்களால் அர்ச்சித்து திறந்து வைக்கபட்டது.

✷ 23.02.2013 மற்றும் 24.02.2013 ஆகிய இருநாட்களும் இரத்னபுரம் பங்கு பார்வை மேதகு . ஆயர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது
24.02.2013 அன்று மாலை திசையன்விளையில் உறுதிப்பூசுதல் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**மறை மாவட்ட தவக்கால திருப்பயணம் 2013**

| | | |
|---|---|---|
| தேதி | : | 03.03.2013 (ஞாயிறு) |
| இடம் | : | திருக்குடும்ப ஆலயம் ,வடக்கன்குளம் |
| மையக்கருத்து | : | இறைமக்களின் நம்பிக்கை சான்று |
| நிகழ்ச்சி நிரல் | : | 04.00 – நற்கருணை ஆராதனை |
| | | 06.00 – திருப்பலி |

நன்றி– **மறைமாவட்ட செய்திகள்**



# பங்குச் செய்திகள்

**01.02.13** நம்பிக்கை ஆண்டைச் சிறப்பாகக் கொண்டாடும் விதமாக பங்குதந்தையால் “Credit Card system" என்ற புதிய பரிசு மழைத்திட்டம் பங்கு மக்களுக்கு அறிவிக்கப்பட்டது, பங்கு அளவில் நற்செயல்கள் செய்பவர்களுக்கு Credit Card வழங்கப்படும். துவக்கபள்ளி மாணவ மாணவியர்களுக்கு அந்தந்த பள்ளி தலைமை ஆசிரியர்களும், மேல் நிலை பள்ளி மாணவ–மாணவி யர்களுக்கு அதன் தலைமை ஆசிரியரும் . மக்களுக்கு திருத் தொண்டரும் Credit Card வழங்குவார்கள். பொதுவான பொதுக்காரியங்களைத் தவிர்த்து தனிப்பட்ட முறையில் நற்செயல்கள் செயபவர்கள் ஒவ்வொரு முறை நற்செயல்கள் செய்து முடித்தவுடன் அதை மேலே குறிப்பிட்டபடி அதன் பொருப்பாளர்களிடம் கூறி அவர்கள் செய்த நற்செயல்களுக்கு ஏற்ப Credit Card பெற்றுக்கொள்ள வேண்டும் .அவ்வாறு தொடர்ச்சியாக நற்செயல்கள் செய்து அதற்கேற்ப Credit Card பெற்று வருபவர்களுக்கு, அவர்கள் பெற்ற Credit Card-களுக்கு ஏற்ப பரிசுகள் வழங்கப்படும் இதைப் பயன்படுத்தி இந்த விசுவாச ஆண்டில் நற்செயல்கள் செய்யும் நல்ல மக்களாக வாழ பங்குத்தந்தை மக்களை கேட்டுக்கொண்டார் .

**02.03.13** அன்று முதல் சனி வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது .அந்த முதல் சனி வழிபாட்டில் கலந்து கொண்டு அன்னையின் பக்தர்களுக்காக திருப்பலி நிறைவேற்றி ஆசிர் வழங்கிய நமது மறை மாவட்ட ஆயர் மேதகு.இவோன் அம்புரோஸ் ஆண்டகை அவர்களுக்கு பங்குதந்தை மற்றும் அருடபணியாளர்கள், பங்குமக்கள் ,அன்னையின் பக்தர்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**10.03.13** அன்று பாலர் சபை திருவிழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.
தூய மரியன்னை ஆண்கள் துவக்கப்பள்ளி பாலர்சபை பொறுப்பாளர்கள் தலைவர் J.சகாய வளன், உபதலைவர் A.செசாரியோ ஆண்ட்ரூஸ், செயலர் P.அந்தோணி ராவின், பொருளாளரர் J.ஜூலியன் டிரோஸ். பாலர் சபையில் புதிதாக சேர்ந்தவர்கள் : V.காட்வின் ஜெரிஷ், T.ஆண்டனி சுமித், S.ஆகாஷ், P.அந்தோணி சதீஷ், J.அந்தோணி ஜெப்ரின், B.ஜெபசிங், S.அருண்குமார், C.ஸ்டீபன்ராஜ், J.ஜெகதீஸ், J.ஜெபஸ்டின்.
புனித வளனார் பென்கள் தொடக்கப் பள்ளி பாலர் சபை பொருப்பாளர்கள்:
தலைவர் : J.பிரிட்டோ, துணைத் தலைவர் : L.லிபியா ஆண்றோஸ் மேரி,
செயலாளர் : M.ஜெனிபர், பொருளாளர்:A.பாத்திமா. புதிதாக சேர்ந்தவர்கள்:
J.வின்சில் மேரி, M.செல்வ மேரி, B.ஜெபசெல்வி, S.செல்வராணி,
A.திருக்கல்யாணி, T.பிரவீனா, M.ரோகினிமலர், K.விண்ணரசி V.ஜெஸ்லின் செல்வமேரி, J.அனுசியா, J.கெத்சியா

**10.03.13** அன்று காலை 11 மணிக்கு பங்குத்தந்தை அருடதிரு பபியான் ஜோசப் அடிகளார் தலைமையில் ஆலய மண்டபத்தில் வைத்து ஊர்ப் பொது அசனவிழா மற்றும் ஊர்க் கூட்டம் நடைபெற்றது

**ஊர்ப் பொது அசனம் 02.03.13 சனிக்கிழமை அன்றும் நடைபெறும் எனவும் அன்று முதல் சனி என்பதால் வழக்கம் போல் திருக்கல்யாண மாதா முதல் சனி வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும் அதைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு ஊர் பொது அசனம் நடைபெறும்.**

**அசன வரி ரூ 500 எனவும் தீர்மானிக்கப்பட்டது**

**அசனப் பொறுப்பாளர்கள்: தலைவர்** : திரு. ஜேம்ஸ், **செயலாளர்** திரு.சூசை ராஜ், **பொருளாளர்**. திரு.சிங்கராயன், **உறுப்பினர்கள்.** திரு .ராஜேந்திரபாபு, திரு. வளன், திரு. சூசை, திரு. ஜான்சன், திரு . பிரதீப், திரு. பிரகாஷ், திரு. கஸ்பார், திரு. அருள்ராஜ், திரு. அந்தோணிராஜ், திரு. ஜஸ்டின் சகாயராஜ், திரு. அமலராஜ், திரு. சாமிநாதன். **ஒலி ஒளி அமைப்பு** : திரு. அமல்ராஜ், சவரத்தொழிலாளி : திரு.ஜெகநாதனுக்கு ரூ.5000 /- உதவித் தொகை வழங்க தீர்மானிக்கப்பட்டது.

**13.03.13** அன்று தவக்காலத்தின் தொடக்கநாளாகிய திருநீற்று புதன் வழிபாடுகள் பங்குத் தந்தை தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சுமார் இரண்டரை ஆண்டுகளாக நமது ஊர் திருக்கல்யாணமாதா திருத்தலத்தில் உபதேசியாராக பணியாற்றிய திரு. அந்தோனி ராசையா அவர்களுக்கு நன்றிகள். புதிய உபதேசியாராக திரு. அந்தோனி அருள்செல்வன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள்.

**16.03.13** சனிக்கிழமையன்று வள்ளியூரில் வைத்து நடைபெற்ற திருவழிபாடு பற்றிய பயிலரங்கத்தில் நம் ஊரில் இருந்து கலந்து கொண்ட திரு.அற்புதராஜ் திருமதி. ரெஜினாள்மேரி, திருமதி.ரெவின்யூஸ்ராணி, செல்வி பெனிட்டா ஆகியவர்களுக்கு நன்றியும் பாராட்டுகளும்.

## குருப் பட்ட விழா

நமது மண்ணின் மைந்தர் அருட்சகோதரர் பாக்கியராஜ் அவர்களுக்கு ஏப்ரல் மாதம் 22 ம் தேதி திங்கள் மாலை நமது திருக்கல்யாணத்தாய் திருத்தலத்தில் வைத்து குருவாக திருநிலைபடுத்தும் வழிபாடுகள் மேதகு. ஆயர்கள் தலைமையில் நடைபெற இருக்கின்றது.



# தவக்காலம்

திருவழிபாட்டுக் கால அட்டவணையில் தனிச் சிறப்பு பெறும் புனித காலம் இது. அருளின் காலம் என்றும், இரக்கத்தின் காலம் என்றும் மன்னிப்பின் காலம் என்று, நோன்பின் காலம், இறைவேண்டலின் காலம் என்றும் பல பெயர்களைக் கொண்டிருந்தாலும் இது மனமாற்றத்தின் காலம் என்றால் மிகையாகாது. ஆண்டுதோறும் வரும் காலமாக அல்லாமல் இது அர்த்தமுள்ள காலமாக மாறவேண்டும். உறவு விரிசல் எல்லாம் சரிசெய்யப்பட வேண்டிய காலம் இது. மனிதனின் முக்கோண உறவுமுறையான கடவுள்-சமூகம்-தன்னிலை என்ற மும்முனை உறவு முறையும் சரி செய்யப்பட வேண்டும்.

தவ உடை, உண்ணா நோன்பு, பிடி அரிசி, ஏழைகளுக்கான உண்டியல் சேமிப்பு, தீய பழக்கங்களை விட்டு விடுவது என தன்னிலையில் மாற்றம் தேடி செயல்பாடுகள் அர்த்தம் பெறவேண்டும். சிலுவைப்பாதை, தவ பயணம், திருயாத்திரை, ஆலயச் சந்திப்பு, நற்கருணை வழிபாடு, நற்செய்தி மாநாடு, பாதம் கழுவும் திருச்சடங்கு, மன்னிக்கும் நிலைப்பாடு என இறை-சமூக உடன்படிக்கை புதுப்பிக்கப்பட வேண்டும். இப்புனிதக் காலத்தில் கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலை (பிலி.2:5) நம்மில் இருக்கவேண்டும்.

தந்தையோடு நெருங்கிய உறவும், ஆழமான சமூக மனிதநேய அன்பும் கிறிஸ்துவுக்கு தீமையை, அலகையை வென்றிட ஆற்றல் தந்தது. தந்தை ஒன்றிப்பும், சமூக உறவாடலும் இயேசு கொண்டிருந்த மனநிலை. தவக்கால பக்தி முயற்சிகளான இறைவேண்டல், நோன்பு, தர்மம் எனும் அறச்செயல்கள் தீமையையும், மட்டுமீறிய இச்சைகளையும் எதிர்த்துப் போராட உதவும் போர்க் கருவிகளாகும் என்கிறார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட்.

நல்லோர் உள்ளம் நல்லதை நாடுவது போலவும், மேலோர் இதயம் மேன்மையைத் தேடியது போலவும் இயேசு தவத்தின், பாலைவன அனுபவத்தின், நோன்பின் உண்மைப் பொருளின் மேன்மையை உணர்த்தினார். மனநிலையில் உறுதிகொண்டார். அதே மனநிலை நம்மிலும் இருந்தால் இது அர்த்தமுள்ள தவக் காலமாகும்.

- தந்தை. S.R.இராஜசேகரன்

# தவக்காலத்தை
## தகுதியாய் கடைபிடிக்க...

1. தவறாமல் இக்காலம் முழுவதும் ஒவ்வொரு நாளும் திருப்பலியில் பங்கேற்று நற்கருணை உட்கொள்ள வேண்டும்.
2. திருவிவிலியத்தை ஒவ்வொரு நாளும் வாசித்து தியானிக்க வேண்டும்.
3. வெள்ளிக்கிழமைகளில் ஒருசந்தி சுத்தபோசனம் கடைப்பிடிக்க வேண்டும். முடிந்தால் இக்காலம் முழுவதும் கடைப்பிடித்தல் நல்லது.
4. வெள்ளிக்கிழமைகளில் சிலுவைப்பாதையை ஜெபிக்க வேண்டும்.
5. ஒவ்வொரு நாளும் ஜெபமாலை ஜெபிக்கவேண்டும்.
6. நேரம் கிடைக்கும் போது நற்கருணை ஆண்டவரை சந்திக்க வேண்டும.
7. குடும்ப இரவு ஜெபம் சொல்ல ஆரம்பிக்காதவர்கள் இக்காலம் முழுவதும் சொல்ல முயற்சி செய்ய வேண்டும்.
8. மனவலிய ஜெபத்தை அடிக்கடி சொல்லவேண்டும். உதாரணமாக: இயேசுவே என்மேல் இரக்கமாயிரும், இயேசுவே நான் பாவி, இயேசுவே உம் இரத்தம் என்னை கழுவட்டும், உம் பாடுகள் என்னை தேற்றட்டும்.
9. துன்ப துயரத்தில் இருப்போர் இயேசுவின் பாடுகளை தியானித்து ஆறுதலும் நம்பிக்கையும் அடைதல் வேண்டும்.
10. கிடைக்கும் நேரத்தை வீணாக்காமல் அந்நேரம் ஆன்மீக வளர்ச்சிக்கான புத்தகங்களை வாசிக்க வேண்டும்.
11. நோயாளிகளை சந்தித்து ஆறுதல் சொல்லி வரவேண்டும்.
12. சமாதான குறைவுடன் வாழும் குடும்பத்தில் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.
13. அடிக்கடி செய்யும் பாவத்தை, தவறை விலக்க வேண்டும்
14. விருப்பமான உணவு வகையில் கட்டுப்பாட்டைக் கொண்டுவருதல் அவசியம்.
15. ஒவ்வொரு நாளும் ஏதாவது சிறு உதவி செய்துவர வேண்டும்.
16. எளிமையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆடம்பர நடை, உடை, நகை, அழகு சாதனங்களை அகற்றுதல் இக்காலத்தில் கட்டாயமாகும்.
17. மனத்தாங்கல் உள்ளோரை மன்னித்து அன்புடன் பழகவேண்டும்.
18. அதிகமாக பேசாமல் கூடுமானவரை மனதிற்குள் ஜெபிக்கவேண்டும்.
19. ஒரு சந்தி நாட்களில் ஏழைகளுக்கு உதவ வேண்டும்.
20. ஆணவத்தை அகற்றி தாழ்ச்சியோடு இருக்க வேண்டும்.



**நன்றி - தாகம் பதிப்பகம்**



# நன்றிகள் பலகோடிகள் 02.02.2013
# முதல்சனி உணவு
# நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| பி. ஸ்டெல்லா ரோஸ், நாகர்கோவில் | 200.00 |
| ரெஜினாள் மேரி குடும்பத்தினர்<br>ஹென்றி மரிய சீமோன்<br>அந்தோணி ராஜ் மனோகரன்<br>ஜாண் ஸ்டீபன் ராஜ்<br>பீற்றர் அற்புத ஜோதி | 10000.00 |
| அன்றோனி மதன் ஆரோக்கியமேரி, சென்னை | 1000.00 |
| மகேஷ் மேரி தீபா, சென்னை | 1000.00 |
| ஆரோக்கிய மதியழகன், மூகாம்பிகை நகர் | 1000.00 |
| சைமன் ஜெகதீஷ், மூகாம்பிகை நகர் | 2000.00 |
| சுவாமிநாதன், பொற்பை | 500.00 |
| ஜெய் மனுவேல் ராஜா, கண்டன்விளை | 5000.00 |
| ரோஸ் சேவியர், பொற்பை | 2000.00 |
| ஜெபாஸ்டின் ரெனிஷா, மதுரை | 501.00 |
| வின்செண்ட், அந்தமான் | 5000.00 |
| ஜோசப் சோரீஸ், தூத்துக்குடி | 1000.00 |
| பிரனிஸ்டன், புன்னக்காயல் | 5000.00 |
| ஆல்பின் தாஸ் நிஷா, இணையம் | 500.00 |
| இஞ்ஞாசி அந்தோனி துரை, பொற்பை | 500.00 |
| டெனிஸ், நாகர்கோவில் | 100.00 |
| அரவிந்த், நாகர்கோவில் | 100.00 |
| லூக்காஸ் மளிகை, திருப்பூர் | 1001.00 |
| ராஜேந்திரன், பொற்பை | 110.00 |
| ஜெயசீலன், அந்தமான் | 1000.00 |
| குறிப்பிட்ட நபர், முளகுமூடு | 500.00 |
| செலீன், மாடத்தட்டுவிளை | 150.00 |
| மீனா, சென்னை | 3000.00 |
| சூசை அடிமை, கொல்லங்கோடு | 100.00 |
| அந்தோனி செல்வன், சாத்தான்குளம் | 1000.00 |
| ரெத்தினபால், சடையால்புதூர் | 500.00 |
| முருகேசன், நரையன்குடியிருப்பு | 1000.00 |
| முனியாண்டி, மீனம்பட்டி | 101.00 |
| சேகர் அனிதா, உவரி | 10000.00 |
| சுரேஷ் பாண்டியன், பொற்பை | 100.00 |
| சண்முகவேல், சாத்தான்குளம் | 600.00 |
| சேசுமரியான் சந்தோஷ், தோப்பூர் | 500.00 |
| ஆஷா ஷைனி, தென்திருப்பேரை | 500.00 |
| செல்வன் சுலக்ஷனா, உவரி | 10000.00 |
| பெனட் மிலாண், ராஜாக்கமங்கலதுறை | 5000.00 |
| கென்னடி, தூத்துக்குடி | 100.00 |
| ராணி பிரான்சிஸ், தூத்துக்குடி | 100.00 |
| பெயர் சொல்லவிரும்பாத நபர், | 500.00 |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| திரு. எட்வின் காமராஜ் டெய்சிராணி குடும்பத்தினர் | சாப்பாடு பிளேட் |
| அன்னையின் அடிமை, பொற்பை | பீடப் பூக்கள் |
| V.மரிய சற்குணம், பொற்பை | பீடப்பூக்கள் |
| ஆரோக்கிய ராஜேஷ், முட்டம் | அரிசி 25 கிலோ |
| அந்தோணி தனிஸ் மலர் (சென்னை) | அரிசி 25 கிலோ |
| ஜோசப் லூர்து மணி, பொற்பை | தக்காளி 25 கிலோ |
| குறிப்பிட்ட நபர், பொற்பை | தேங்காய் 41 |
| J. ரவீஸ்டர், பொற்பை | தக்காளி-12பெட்டி<br>உருளை-1மூடை<br>கேரட்-56கிலோ<br>வெங்காயம் -60 கிலோ |
| S.R.T.கோயம்பேடு | உருளை 1 மூடை |
| தணிகாசலம், கோயம்பேடு | உருளை 1 மூடை |
| ஈஸ்வரன், கோயம்பேடு | வெங்காயம் 1 மூடை |
| நீலகிரி டிரேடர்ஸ், கோயம்பேடு | வெங்காயம் 1 மூடை |
| ஜெயச்சந்திரன், கோயம்பேடு | ம.பூசணி 20 கிலோ<br>மிளகாய் 15 கிலோ |
| துரை, கோயம்பேடு | மாங்காய் -10 கிலோ |
| M.A.S.கோயம்பேடு | சேனை 60 கிலோ |
| குறிப்பிட்ட நபர், பொற்பை | அரிசி 300கிலோ |
| ராஜேஷ் அமலா, பொற்பை | அரிசி 50கிலோ |
| லீமா ஞானம், மலேசியா | அரிசி 50 கிலோ |
| சைமன் ஜெகதீஷ், மூகாம்பிகை | அரிசி 50 கிலோ |
| M.S.R.ஜஸ்டின், சென்னை | அரிசி 100 கிலோ |
| குறிப்பிட்ட நபர், சாத்தை | அரிசி 100 கிலோ |
| சூசை மிக்கேல், கோவை | அரிசி 50 கிலோ |
| ரூபி ஸ்டோர், பொற்பை | அரிசி 50 கிலோ |
| S.ஜெரோம் குயின்றின், கவரப்பேட்டை | அரிசி 100 கிலோ |
| M.தாமஸ், நந்தன்குளம் | அரிசி 100 கிலோ |
| செலின் மாடத்தட்டுவிளை | புளி 1 கிலோ |
| சிலுவை சவரியப்பன், பொற்பை | அரிசி 25 கிலோ |
| சித்திரை ராஜ், உடன்குடி | அரிசி 25 கிலோ |
| காட்வின் ரேஸ்மி, உவரி | அரிசி 50 கிலோ |
| ஏசுதாசன், மீனம்பட்டி | அரிசி 10 கிலோ |
| D.அம்ரிதா, அமலிநகர் | அரிசி 25 கிலோ |

### திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 31.12.12 அன்று இருப்பு | 177025.00 |
| 01.01.13 முதல் 31.01.13 வரை விற்பனை | 430386.00 |
| மொத்தம் | 607411.00 |
| 01.01.13 முதல் 31.01.13 வரை செலவு (பொருட்கள் + சம்பளம்) | 436228.00 |
| 31.01.13 அன்று இருப்பு | 171183.00 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்

## முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (02.02.2013)

| | |
|---|---|
| யோவான் சமையல் | 13000.00 |
| S. ஜெயபாண்டி & 4 பணியாள் 2 நாள் | 1300.00 |
| சென்னை பஸ் காய்கறி செலவு | 700.00 |
| இம்மானுவேல் வண்டி வாடகை | 1700.00 |
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| தூய யோவான் ஆலய பாத்திர வாடகை | 200.00 |
| வின்செண்ட் உணவு விடுதி | 1054.00 |
| Y.இருதயராஜ் ரூபி ஸ்டோர் 2½ மூடை அரிசி | 9000.00 |
| K.பேச்சியம்மாள் தூய்மை பணி | 2000.00 |
| அந்தோணிராஜ் இறைச்சி 76 கிலோ | 32820.00 |
| அந்தோணிராஜ் பட்டவிறகு 1.5 டன் | 6000.00 |
| ஜோசப் மளிகை | 46075.00 |
| S.ஜஸ்டின் மின்னல் தண்ணீர் 50 மூடை | 2600.00 |
| ஜெயக்குமார் வண்டி வாடகை 6நடை | 1300.00 |
| மொத்தம் | 118149.00 |

| | |
|---|---|
| முன்னிருப்பு வங்கியில் | 90413.00 |
| நன்கொடை மூலம் வரவு | 71263.00 |
| மீதமுள்ள முதற்சனி அசனபொருட்கள் ஏல வரவு | 20120.00 |
| ஜோஸ் குடும்பத்தினர் வங்கியில் | 3000.00 |
| மொத்தம் | 184796.00 |
| செலவுகள் | 118149.00 |
| இறுதி இருப்பு (வங்கியில்) | 66647.00 |

## வாழ்த்துகிறோம்

| எண் | மண நாள் | மணமக்கள் | ஊர் |
|---|---|---|---|
| 1. | 28.01.13 | **விஜயன்- ஏஞ்சல் ஹார்ட்வின்** | பொற்பை |
| 2. | 28.01.13 | **அமிர்தராஜ் - லூர்து அருள்ராணி** | பொற்பை |
| 3. | 01.02.13 | **சகாயராஜ் பிரபாகரன் - சகாய சந்தோஷ் சுமிதா** | பொற்பை |

# அன்பு என்பது தெய்வீகமானது...



## மனித அன்பு

மனித அன்பு என்பது மாறும் அன்பாகும் .இன்று நீ நல்லவன் உன்னைப் போல் நல்லவன் இல்லை என்று சொல்லும் நாக்கு நாளை உன்னை போல ஒரு கெட்டவனை நான் பார்த்ததே இல்லை என்று சொல்லும் மனித அன்பு நம்பகத்தன்மை அற்றது ஆகும்

மேலும் இந்த அன்பு பச்சோந்தி போல அவ்வப்போது நிறம் மாறும் தன்மை கொண்டது ஏழை ,பணக்காரன் ,பெண் , ஆண் , தொழிலாளி முதலாளி என்பதின் அடிப்படையிலும் பதவிக்கு தகுந்தார் போலவும் நிறம் மாறும் தன்மையுள்ளது

ஒரு ஒய்வு நாளில் அதாவது ஞாயிற்று கிழமை இயேசு எருசலேம் உள்ளே நுழையும் போது அவருக்கு மிகப்பெரிய வரவேற்பு கொடுத்து உன்னதத்தில் இருந்து வந்தவருக்கு மகிமை என்று பாட்டு பாடிய மக்களில் பலர் இயேசுவை சிலுவையில் அறையும் என்று சத்தம் போடும் அளவுக்கு மாறிவிட்டார்கள்

ஆளை பார்த்தால் ஒரு அன்பு ,ஆளை பார்க்கா விட்டால் ஒரு அன்பு ,தனியாக இருக்கும் போது ஒரு அன்பு ,கூட்டமாக இருக்கும் போது ஒரு அன்பு ,பணம் இருந்தால் ஒரு அன்பு ,பணம் இல்லாவிட்டால் ஒரு அன்பு ,அப்பப்பா எத்தனை விதமான மனித அனபுகள் .

## தெய்வீக அன்பு

ஒருவன் தன் நண்பருக்காக தன் உயிரை கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை .அன்பு என்பது தன்னைப் பற்றி என்றுமே கவலைப்படாது.பிறர் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதற்காக தன்னையே கொடுக்க கூட தயங்காது ஒருவன் எத்தனை முறை திட்டினாலும், எவ்வளவு தான் துரோகம் செய்திருந்தாலும் ,அவன் மீதிலும் அன்பு வைக்கும் நிலையான அன்பே தெய்வீக அன்பு .இந்த அன்பு மனிதன் எப்படிப்பட்டவன் என்று பார்க்காது.

ஏழை ,பணக்காரன் வித்தியாசம் பார்க்காது .யாரையும் மனநோக பேசாது இருக்கும் .சூழ்நிலையை பார்க்காது ஆனால் பிறருக்கும் உதவ வேண்டும் என்று நினைக்க கூடிய அன்பு. இறைவனின் அன்பு நம்முள் இருந்தால்ஒழிய , இப்படி ஒரு அன்பை நம்மால் ருசித்து பார்க்க முடியாது யாரென்றே தெரியாதவருக்காக கண்ணீர்விட்டு கதறி மன்றாடவும் பிறருக்காக தன்னையே கொடுக்கவும் கூடிய அன்பு கிறிஸ்தவ மதத்தின் சிறந்த பண்பு. ஏனென்றால் அன்புக்கு இலக்கணமான ஆண்டவர் இயேசு என்னும் உயிருள்ள உண்மை இறைவன் நம் அனைவரின் இதயத்திலும் இருக்கிறார், வாழ்ந்து வருகிறார்.

– அருட்சகோதரி சுரேகா

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**02-02-2013 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 4147 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 2752 பேர் |
| சுகப்பிரசவம் | - | 2390 பேர் |
| நற்சுகம்பெற | - | 4608 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 3642 பேர் |
| தேவஅழைத்தல் | - | 2752 பேர் |
| வேலைகிடைக்க | - | 3265 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 4165 பேர் |
| குடும்பசமாதானம் | - | 4109 பேர் |
| குடும்பநலன் | - | 4187 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 3450 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 3734 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 3377 பேர் |
| மனஅமைதிக்காக | - | 3677 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 2353 பேர் |
| மனமாற்றமடைய | - | 3068 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 3940 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 3757 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 3564 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 5043 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 2415 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** - பங்குத்தந்தை


**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

## விலங்குகளின் அறிவியல் பெயர்கள்

1. புலி – பான்ந்தரா டைகிரிஸ்
2. செம்மறி ஆடு – போவிடே ஒவிஸ்
3. சிங்கம் – பாந்தரா லியோ
4. ஒட்டகம் – கேமிலெஸ் கேமிலிடே
5. குரங்கு – பாண்டுரே குளோடைட்ஸ்

–ஜெசிகா ரெஜிலின், வெள்ளக்கோவில்





# மகா அன்பிற்குப் பாத்திரமான மாதாவே!

நம் அன்பு அன்னை தூய மரியா, நம் அனைவரின் மகா அன்புக் குரிய தாயாக இருக்கிறார். இதை ஆங்கலத்தில் Mother Most Amiable என்றும், இலத்தின் மொழியில் Matter amiable என்றும் அழைக்கிறோம். காரணம், அன்னை மரியா பிறரை அன்பு செய்யும் தாயாக இருக்கிற அன்பையும் ஆசீர்வாதங்களையும் தந்து, நம் அன்பிற்கு ஆதாரமான தாயாக இருக்கிறார் இதற்கு காரணம் மரியாவின் மாசற்ற அன்பின் இதயம்தான் காரணம் .

முதலாவதாக மகா அன்பிற்கு பாத்திரமாக, அன்னை மரியோடு ஒப்பிடு பெறுபவள் ஈசாக்கின் மனைவி ரெபேக்கா ஆவார். ரேபேக்கா ஆபிரகாமின் சகோதரர் நாகோருக்கும், அவர் மனைவி மில்க்காவுக்கும பிறந்த பெத்துவேலின் மகள் . அவள் எழில் மிக்க தோற்றம் உடையவள். ஆண் தொடர்பு அறியாத கன்னிப் பெண் ( தொநூ 24:15 16 )

இரண்டாவதாக மகா அன்புக்கு பாத்திரமாக , மரியன்னையோடு ஒப்பிடு பெறுபவள் யாக்கோபின் மனைவி ராகேல் ஆவார். லாபானுக்கு இரண்டு புதல்வியர் இருந்தனர் . மூத்தவள் பெயர் லேயா, இளையவள் பெயர் ராகேல்,லேகா மங்கிய பார்வை உடையவள். ராகேலோ வடிவழகும், எழில் தோற்றமும் உள்ளவள் ( தொநூ 29:16 17 )

முன்றாவதாக, வடிவும், எழிலும் கொண்டு மரியோடு ஒப்புமை பெறுபவள் யூதித்து. அவள் மெராரியின் மகள் (யூதி 8:1). யூதித்தின் கணவர் மனாசே. அவர்கள் இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் . வார்கோதுமை அறுவடை காலத்தில் மனாசே இறந்து போனார் (யூதி 8:1) .எனவே யூதித்து கணவனை இழந்த கைம்பெண் ஆனாள். (யூதி 8: 4) அதே சமயத்தில் யூதித்து பார்வைக்கு அழகானவள் தோற்றத்தில் எழில் மிக்கவள் ( யூதி 8: 7) மேலும் யூதித்து கடவுளுக்கு அஞ்சி நடந்தாள் . அவளைப் பற்றி யாரும் தவறாகப் பேசியதில்லை ( யூதி 8:1 8).

நான்காவதாக, எழில் உடையவளாக, மகா அன்புக்குரியவளாக இருந்தவள் அரசி எஸதர். இவள் அழகில் சிறந்த பெண்மணி (எஸ்தர் 2:7) இவ்வாறாக, பழைய ஏற்பாட்டில் ரெபேக்கா , ராகேல் ,எஸ்தர் மற்றும் யூதித்து போன்றோர் மகா அன்புக்குப் பாத்திரவான்களாக இருந்தாலும், புதிய ஏற்பாட்டில் மகா அன்பிற்கு பாத்திரமாக உள்ள மாதாவே என்று அழைக்கபடுபவர் நம் அன்னை மரியா ஒருவரே. இங்கே அன்னை மரியா அழகு நிறைந்தவராக , எழில் நிறைந்தவராக மட்டும் இல்லாமல், அருள் நிறைந்தவராக இருக்கிறார் அருள் மிக பெற்றவராக இருக்கிறார் ( லூக்கா 1: 28) . ஆக , நம் தாய்மரி மற்ற எல்லோரையும் விட அன்புள்ளவராக , அன்பு செய்யப் படுபவராக இருக்கிறார் . இதை இலத்தின் மொழியில் , Amabilis super omnes என்று அழைக்கிறோம் . எனவே தான் ,நாம் அழகோவியமே , எங்கள் அருள் நிறை அன்னை மரியே என இன்று மரியை வாழ்த்திப் பாடுகிறோம்.

**–நன்றி. தாயே எங்கள் தஞ்சமே**




# திருக்கல்யாணத்தாயின்
# அற்புதங்கள்... சாட்சிகள்...

1. திருமணம் நல்லமுறையில் முடிவானதற்கு நன்றி
– **தோமஸ் லிட்டில் ஃப்ளவர்,** தூத்தூர்
2. திருமணம் நல்லமுறையில் நடைபெற்றமைக்கு நன்றி
– **ஜெஸ்ரோன் விந்து,** இணையம்
3. வெளிநாட்டில் வேலை கிடைத்தமைக்கு நன்றி – **ஜான் ரீகன்,** ராமன்துறை
4. திருமணம் நல்லமுறையில் முடிவானதற்கு நன்றி
– **ஜெயந்தி,ராஜன்,**பாத்திமா,மணப்பாடு
5. காணாமல் போன செயின் கிடைத்ததற்கு நன்றி– **ஆண்றோ,சுனிதா,**தூத்தூர்
6. நல்ல இல்லம் அமைந்ததற்கு நன்றி – **சகாயம்,சோபியா,**புத்தன்துறை
7. திருமணம் நிச்சயமானதற்கு நன்றி – **அமல்ராஜ்,**மூக்கையூர்
8. திருமணம் நல்லமுறையில் நடந்ததற்கு நன்றி
– **லூர்து சாமி,அல்போன்ஸ்,**மதுராந்தகம்
9. திருமணம் நல்லமுறையில் நடந்ததற்கு நன்றி – **பிரசாந்த்,சீசா,**வாணியக்குடி
10. நினைத்த காரியம் நடந்ததற்கு நன்றி – **ஜெரோம் மேரி,**புத்தன்துறை
11. புதிய இல்லம் அமைந்தர்க்கு நன்றி – **கிறிஸ்டோபர்,அருள்சீலி,**இணையம்
12 நினைத்த நல்லமுறையில் நடந்ததற்கு நன்றி –**ராஜேஸ் ,மினி ,** தூத்தூர்
13. நல்ல இல்லம் அமைந்ததற்கு நன்றி – **மரிய ஜோசப், செல்வமேரி**
கீழ்மணக்குடி
14. நினைத்த காரியம் நடந்ததற்கு நன்றி – **புஷ்பராஜ்,** பாரசாலை
15.ஆண்குழந்தை பிறந்ததற்கு நன்றி – **ரீனா,** பாரசாலை
16. நல்ல உடல் நலம் கிடைத்தற்கு நன்றி – **விஜயகுமாரி,** இராமன்துறை
17. நல்ல சுகம் கிடைத்தற்கு நன்றி – **ஆஷிக்லால்,** இராமன்துறை
18. ஏழு வருடங்களுக்கு பிறகு குழந்தை வரம் கிடைத்ததற்கு நன்றி
–**மார்சிலின் கார்மல்,** கன்னியாகுமரி
19. திருமணம் நடைபெற்றதற்கு நன்றி
–**ஷார்லின்,செல்வகுமாரி,சுஜி,** இராமன்துறை
20.திருமணத்திற்கு தேவையான பணம் கிடைத்ததற்கு நன்றி
–**விஜயா,** பூந்துறை
21. குழந்தை வரம் கிடைத்ததற்கு நன்றி – **ரீத்தா,சுதா** பாரசாலை
22. குடும்ப நலன் கிடைத்ததற்கு நன்றி –**மரிய பிலோமினம்மாள்** இராஜாவூர்
23. இருதய அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடந்து சுகம் கிடைத்தற்கு
நன்றி – **ஜான் கென்னடி,** இராஜாவூர்
24. உடல் நலம் பெற்றதற்கு நன்றி –**ஹில்டன்,** கொழந்தட்டு
25. நல்ல வாகனம் கிடைத்ததற்கு நன்றி –**முத்து, ரேவதி,** மீனம்பட்டி
26. சுகம் பிரசவம் கிடைத்ததற்கு நன்றி – **ப்ரமிளா,** இராமன்துறை
27. குழந்தை பாக்கியம், நல்ல இல்லம் கிடைத்ததற்கு நன்றி
– **ஜான்சி ராணி,** அழகப்பபுரம்.

**- பங்குத்தந்தை**

# முதல் சனி வழிபாடு (2.2.2013)



திருக்கல்யாண மாதா திருத்தலத்தில்

ஜனவரி மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 02.02.2013 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**ஜெகதீஸ்** அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துக்கள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. மறைமாவட்ட ஆயர் மேதகு. **இவோன் அம்புரோஸ்** அவர்கள் தலைமையில் பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு.**பீட்டர் ராஜா,** அருட்திரு.**டோம்னிக்,** அருட்திரு. **பங்கிராஸ்,** அருட்திரு.**ஜெகதீஸ்,** அருட்திரு.**டக்ளஸ்**, அருட்திரு. **லூஷன்**,அருட்திரு.**உபார்ட்டஸ்**, திருத்தொண்டர் **டேவிட் வளன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் மறைமாவட்ட ஆயர்,மேதகு.**இவோன் அம்புரோஸ்** அடிகளார் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து 125 வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **10,500** க்கு மேற்ப்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், மோர் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவு வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதை அருட்திரு. **ஜெகதீஸ்** அடிகளார் திருத்தொண்டர் **டேவிட் வளன்** இணைந்து வழி நடத்தினார்கள். அதன்பின்பு பங்குத்தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.

**– பங்குத்தந்தை**

# ஜனவரி 2013 – வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| **வரவுகள் :** முன்னிருப்பு<br>நிரந்தர வைப்பு நிதி ரூ.200000.00<br>வங்கியில் ரூ. 642.00<br>கையில் ரூ.608.00 | 201250.00 | |
| திருப்பலி 415X70 (முதற்சனி 308 அலுவலகம் 107) | 29050.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை - 12745.00<br>கிளை பங்குகள் - 2280.00 | 15025.00 | |
| வங்கி வட்டி வரவு | 1283.00 | |
| திருமணம் | 1200.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 147670.00 | |
| பள்ளிகள் மூலம் | 5407.00 | |
| பயணிகள் தங்கும் அறை வாடகை | 2200.00 | |
| ஆலய வீடு வாடகை | 1000.00 | |
| அசன மண்டப வாடகை | 3000.00 | |
| முதல்சனி கடைகள் வரவு | 4400.00 | |
| காலண்டர் விற்பனை மூலம் | 9820.00 | |
| திருவிழா மூலம் வரவு | 498660.00 | |
| மொத்தம் | 919965.00 | |
| **செலவுகள் :** | | |
| முதல் சனி அருட்தந்தையர்கள் படி | | 7050.00 |
| வாலண்டியர் சேலைகள் | | 9200.00 |
| புது வருட வாணம் | | 500.00 |
| கிறிஸ்து பிறப்பு மற்றும் புதுவருட பூக்கள் | | 1500.00 |
| முதல்சனி மேக் டி.வி விளம்பரம் | | 4000.00 |
| அருட்தந்தை பபிஸ்டன் அன்பளிப்பு (பிரியாவிடை) | | 3000.00 |
| பள்ளிக்கு இன்வெர்ட்டர் அமைக்க + பேட்டரிகள் | | 89663.00 |
| நோட்டீஸ் வினியோகம் செய்ய | | 500.00 |
| கேமரா மேன் பயணப்படி | | 500.00 |
| அருட்சாதன விண்ணப்ப படிவம் | | 90.00 |
| பிளம்பர் வேலை (பயணிகள் பாத்ரூம்கள்) | | 350.00 |
| சி.டி. (மலையாள பாடல்கள்) | | 160.00 |
| செய்தித்தாள் | | 255.00 |
| பள்ளிக்கு மின் சேஞ்சர் | | 891.00 |

| | |
|---|---|
| தொலைபேசி மற்றும் செல்போன் கட்டணம் | 1292.00 |
| இண்டிகா ரிப்பேர் | 750.00 |
| அருட்பணியாளர்கள் துணிகள் | 543.00 |
| உதவித் தொகைகள் | 1100.00 |
| ஸ்டேஷனரி சாமான்கள் | 1547.00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 10500.00 |
| மருந்து வகைக்கு | 1323.00 |
| டீசல் ஜெனரேட்டர் & வாகனம் | 6818.00 |
| கோயில் பராமரிப்பு செலவு | 1000.00 |
| செக்போஸ்ட் | 140.00 |
| பொது நிலையினர் பணியகம் பயணப்படி | 1500.00 |
| தோட்ட வேலைக் கூலி | 300.00 |
| கேஸ் அடுப்பு சரி செய்ய | 510.00 |
| புனித வரி | |
| திருப்பலி 415× 5 = 2075 | |
| திருமணம் 2 × 8 = 16 | |
| ஞானஸ்நானம் 27 × 5 = 135 | |
| திருப்பலி 385 ×50 = 19250 | 21476.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| இரவுப்பணியாளர் ஊதியம் | 2000.00 |
| தொடக்கப்பள்ளி ஆசிரியர் ஊதியம் | 2000.00 |
| இரண்டு துப்புரவுப் பணியாளர்கள் ஊதியம் | 6000.00 |
| அருட்சகோதரர் படி | 1000.00 |
| பங்குத் தந்தை படி | 6000.00 |
| பங்குத் தந்தை திருப்பலிப் படி | 1500.00 |
| கம்ப்யூட்டர் மேன் கூலி | 500.00 |
| தண்ணீர் + பால் | 2035.00 |
| மொத்த செலவு | 194493.00 |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ.919965.00 |
| மொத்த செலவு | ரூ. 194493.00 |
| இறுதியிருப்பு | ரூ. 725472.00 |
| வங்கியில் | ரூ. 716105.00 |
| கையில் | ரூ. 9367.00 |
| மொத்தம் | ரூ. 725472.00 |

# வாசகர் உள்ளம்...



* உலகத் திருச்சபை செய்திகள் திருத்தந்தையின் மடல்களை அறிந்து கொள்ள எளிதாக உள்ளது . **ரவி** – மயிலாடுதுறை

* மறைமாவட்ட செய்திகள் நமது மறைமாவட்ட ஆயரின் கடந்த மாத செயல்பாடுகளை அறிந்த கொள்ள உதவியாக உள்ளது .
**ஆரோ அல்ஃபினா** – தஞ்சை

பங்கு செய்திகள் நமது திருக்கல்யாண அன்னையின் திருவிழா அன்றாட நிகழ்வுகளை படம் பிடித்து காட்டுவதாக உள்ளது.
**விஜய்** – கோவை

* திருவிழாவில் 10 நாட்களும் முழுமையாக கலந்து கொள்ள முடியாத என்னை போன்று தொழிலின் பொருட்டு வெளியூரில் வசிக்கும் மக்கள் திருவிழா முழு நிகழவுகளும் , பங்கு செய்திகள் மூலமாக அறிந்து பெரு மகிழ்ச்சி கொண்டோம்
**கிருஸ்டோபர்** – சென்னை

* முதல் சனி உணவு நன்கொடைளர்களின் பங்களிப்பு அனனையின் அற்புதத்திற்கு அருமையான சாட்சிகள். **சுதா** – மீரானகுளம்

* அன்னையின் தேர்ப்பவனி பற்றிய அலைமோதிய திருவிழா கட்டுரை மெய்சிலிர்க்க செய்கின்றது. **செல்வகுமார்** – குற்றாலம்

* அன்னையின் தேர்ப்பவனி பக்தி பரவசம் மிக்க மக்களின் ஆன்மீக வெளிப்பாடுகளை பிரதிபலிக்கின்றது. **ரவீஸ்டர்** – பெரியதாழை

* கன்னியரில் உத்தமக் கன்னியே கட்டுரை அன்னை கத்தோலிக்க திருச்சைபையின் விசுவாச அடையாளம் என்பதனை மெய்பித்துக் காட்டுகிறது
**பாலன் அருள் ஜோசப்** – கன்னியாகுமரி

* முதல் சனி வழிபாட்டு நிகழ்ச்சிகளின் தொகுப்பு மக்களின் ஆன்மீக தாகத்தை பறைசாற்றுவதாக உள்ளது. **வில்சன்** –இராமன்துறை

* மஞ்சளின் மகிமை பயனுள்ள ஒரு செய்தியாக இருந்தது.
**அமுதா** – பூச்சிக்காடு

* வாழைப்பழ தயாரிப்பு கேக் தயாரிப்பும் அருமை. **சில்வியா** – காஞ்சிபுரம்


* லூர்து அன்னை ஆன்மீக தொகுப்பு நன்றாக இருந்தது.
**ஷாருக்கான்** – திண்டுக்கல்

* அருளானந்தரின் வாழ்க்கை வரலாறு கிருஸ்தவ விசுவாசத்திற்கு ஒரு சான்று
**குழந்தை ராஜன்** – தூத்துக்குடி

* சர் .ஐசக் நியுட்டன் பயனுள்ள ஒரு அறிவியல் தொகுப்பு
**ஆரோக்யராஜ்** – மதுரை

* திருவிழா கொடியேற்ற நிகழவு செய்தி அதை நம் கண் முன்னே படம் பிடித்து காட்டுகிறது. **ஜெஸிக்கா** –நாகை.

**– பங்குத்தந்தை**



# காத்திருக்கும் இறைவன்

இந்த உலகம் கடிகார முள்ளுக்கு இணையாக,போட்டியாக ஓடிக்கொண்டேயிருக்கிறது. யாரும் யாருக்காகவும் காத்திருப்ப தில்லை ஆனால் ஒருயிர் மட்டும் உனக்காக எனக்காக நம் எல்லோருக்காகவும் காத்திருக்கிறது .அவர் தான் படைப்பின் ஆண்டவர் பரமன் இயேசு நம் மீது கொண்ட அன்பின் காரணமாக நம்மை மீட்க தன் உயிரையே தந்திட்ட மாபிரான் இயேசு

**காத்திருக்கும்இறைவன்**

. இயேசு கிறிஸ்துவின் அன்பு தன்னையே தருகின்ற அன்பு அவரது கல்வாரி அன்புக்கு நிகரானது இப்பூவுலகில் ஒன்றுமேயில்லை நம்மில் பாவம் நிரம்பி அழிந்தாலும் பரமன் இயேசு நமக்காக மீண்டும் மீண்டும் கல்வாரியில் பலியாகி நம்மை புதுபிறப்பு அடையச் செய்கிறார் பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள் (மத் : 11 28 29)என்று இயேசு இப்போதும் எப்போதும் தம் இரு கரங்களையும் விரித்த வண்ணம் நம்மை அரவணைக்க காத்திருக்கிறார் அன்று முனனோர்கள் அவரை சோதித்த போதும் இன்று நம் பாவங்களால் அவரை மன வருத்தமடைய செய்த போதும் அவர் நம்மை கைவிட்டுவிடவில்லை மாறாக நாம் மனமாற்றமடைய அன்போடு காத்திருக்கிறார் இதுபோல் வரும் காலத்தில் நம் வழி மரபினர் காத்து வழி நடத்த சித்தம் கொண்டுள்ள ஒரே இறைவன் அவரே .ஏனெனில் அவர் தம் உரிமை சொத்தாய் சேர்ந்து கொண்ட மக்கள் நாம்.

**உப்பாக ஒளியாக**

விழுந்தவர் எழுவதில்லையா பிரிந்து சென்றவர் திரும்பி வருவதில்லையா ஊதாரி மைந்தன் உவமை நமக்கு கூறுவது என்ன ஊதாரியான தன் மகன் மனம் திரும்பி வந்த போது அவன் தந்தை அனைத்தையும் அவனுக்கு கொடுத்தார். தந்தை தன் மகன் மீது கொண்ட அன்பை விட மேலானது இறைவனின் அன்பு இறைவனின் அன்பினின்று விலகிச்செல்லும் நம்மை ஆன்ம சோதனை செய்து பார்க்க அழைப்பு விடுகின்றது இத் தவக்காலம் நாம் மனம்திரும்பி உலகிற்கு உப்பாக ஒளியாக வாழ வேண்டும் என்பதே விண்ணகத்தந்தையின் விருப்பம் எனவே நம் வழிகளை ஆய்ந்தறிந்து ஆண்டவரிடம் திருப்புவோம் நமக்காக பாடுபட்டு உயிர்த்த விண்ணக இறைவனை நோக்கி இதயத்தையும் கைகளையும் உயர்த்துவோம். பிறந்தது முதல் சிலுவையில் மறித்து உயிர்த்த பின்னும் என்றென்றும் நமக்காக காத்திருக்கும் இயேசுவுக்கு நாம் செய்யும் நன்றி கடன் என்ன? பொன்னோ பொருளோ அல்ல அவர் விரும்பியது போல் அவர் கட்டளை களை கடைபிடித்து வாழ்வது நம்மை போல் பிறரையும் நேசிப்பது.

– **மைக்கிள் உஷா,** பொற்பை

# புனித சூசையப்பர்

## தொழிலாளர்களின் பாதுகாவலர்



கலிலேயா நாட்டில் நாசரேத் என்னும் ஊரில் தாவீது குலத்தை சார்ந்த யாக்கோபு, நீப்பி என்ற ஏழைப் பெற்றோருக்கு மகனாக சூசை பிறந்தார் , இவர் சிறு வயதிலேயே பக்தி நிறைந்த வாழ்வு வாழ்ந்தார். எனவே துறவு வாழ்வு வாழ 12 வயதில் காட்டிற்கு சென்று தவம் புரிந்தார். இந்த நேரத்தில் கடவுளின் அழைப்பு வானதூதர் மூலமாக சூசையப்பருக்கு அறிவிக்கப் பட்டது. சியோன் என்ற குருவுக்கு இறைவன் காட்சி கொடுத்து அன்னை மரியாளை தாவீது குலத்தை சார்ந்த ஒருவருக்கு மணம் முடித்து வைக்கும்படி கட்டளையிட்டார். எனவே சியோன் தாவீது குல இளைஞர்களை அழைத்து எல்லா வகையிலும் கம்பு(கோல்) கொடுத்து செபிக்கும்படி கூறினார். சூசையின் கையிலிருந்த கோல் பூத்து மணம் வீசியது .மேலும் இறையருளால் நிரப்பப்பட்டு சூசையின் தலையில் பொன் ஒளி வீசியது. சூசைக்கு 33 வயதும் மரியாவுக்கு 15 வயதும் இருக்கும் போது திருமணம் நிறைவேறியது .உங்கள் குலத்தில் இறைமகன் இயேசு பிறப்பார் என்று சிமியோன் ஆசிர்வதித்தார். எனவே அன்னை மரியாவை மனைவியாக ஏற்று இறைமகனை வளர்க்கும் தந்தையாகும் ,மாபெரும் பாக்கியம் கிடைத்தது

**சூசையப்பருக்கு ஏற்பட்ட இன்னல்களும் இடையூறுகளும் பற்பல**

1. அன்னை மரி கன்னி கருவுற்றுள்ளாள் .அவளை ஏற்றுக் கொள்வதா என்ற சோதனை நேரம்
2. குடிகணக்கு பதிவு செய்ய பெத்லகேமிற்கு அலைந்து திரிந்தது
3. பேறுகால வேளையில் தங்குவதற்கு கூட இடம் கிடைக்காது அவதியுற்றது
4. மாடடைக் கொட்டகையில் மாபரன் இயேசு தீவனத் தொட்டியில் தவழ்ந்தது
5. குழந்தை இயேசுவை ஏரோது கொல்ல சதிதிட்டம் தீட்டியதால் அவரைக் காப்பாற்ற அவர் பட்ட சிரமம். குழந்தை பெற்ற அன்னை மரியாள் உடல் வேதனையான நேரத்தில் பாலன் இயேசுவையும், அன்னைமரியாவையும் காப்பாற்றிய வீரன் சூசை, உடல்வேதனையோடு பொருப்புள்ள குடும்பத்தலைவராக தச்சுவேலை செய்து குடும்பத்தை காப்பாற்றியது. இதையெல்லாம் கடவுளுக்காக பொருமையுடன் செயல்பட்ட புனிதரை நீதிமான் என்று திருச்சபை புகழ்வது சாலச்சிறந்ததே

**புகழ்ச்சி**

தொழிலாளர்களின் பாதுகாவலராகிய புனித சூசையப்பரை ,கற்புக்கும் நல்ல படிப்பிற்கும் ,நல்ல மரணத்திற்கும் பாதுகாவலராக போற்றி புகழ்கிறோம் .புனித அவிலா தெரசாள் புனித சூசையப்பரை கார்மெல் சபைக்கு பாதுகாவலராகதெரிந்து கொண்டார் .1870 ம் ஆண்டு திருத்தந்தை 9 ம் பத்திநாதர் புனித சூசையப்பரை அகில உலகின் பாதுகாவலராக தெரிந்து கொண்டார்

1955 ம் ஆண்டு திருத்தந்தை 12 ம் பத்திநாதர் மே மாதம் 1 ம் தேதியை தொழிலாளரான புனித சூசையப்பர் தினமாக கொண்டாட பணித்தார். இந்த புனிதரின் திருநாள் மார்ச் 19 ம் தேதி ஆகும் .இந்த உத்தமரை நாம் நம் வாழ்வின் துணைவராகவும் ,தலைவராகவும் வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்டு அவர்வழியில் வாழ வரம் வேண்டி ஜெபிப்போம்.புனித சூசையப்பரே புனித அன்னை மரியாளையும் ,குழந்தை இயேசுவையும் எல்லா சூழ்நிலையிலும் கண்ணின் மணி போல் காத்து வழி நடத்தினீரே. எங்களையும் உமது அரவணைப்பில் வைத்து காத்தருளும்,ஆமென்.

–**ராய்மேரி,** புன்னார்குளம்

# மன்னிப்பு

மன்னிப்பு எல்லாரும் பகிர வேண்டிய பண்பு ஆனால் எல்லோரும் செய்யக் கடினப்படும் ஒரு காரியம். அதனால் தான் இன்று சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன. மன்னிக்கத் துணிந்தவர் தண்டிக்க மாட்டார், தண்டித்துவிட்டால் அது மன்னிப்பே இல்லை மன்னித்து விட்டேன், ஆனால் மறக்க முடியவில்லை என்று சிலர் சொல்வதுண்டு ஆனால் உண்மை என்னவென்றால் மன்னிப்பின் தொடக்கமே அந்தக் குற்றத்தை, தவறை, தீமையை நினைவிற்கொள்ளாமல் மறப்பதுதான். ஒருவன் தன் பாவங்களையெல்லாம் சொல்லிக் கடவுளிடம் மன்னிப்பு வேண்டினான், அப்பொழுது கடவுள், அப்படியா நீ இவ்வளவு பாவம் செய்தாயா, அதெல்லாம் அப்பொழுதே மறந்துவிட்டேனே என்றாராம். ஆம் அவர் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மைத் தண்டிப்பதில்லை (தி.பா 103:10) எனவே மன்னிப்பு என்ற கலையைக் கற்றுக்கொண்டால் வாழ்க்கை கைவசப்படும். மன்னிப்பு உறவு செய்கிறது. தன்னைக் கல்லால் எறிந்து கொல்பவர்களைப் புனித ஸ்தேவான் மன்னித்ததால் தான் சவுல் பவுல் ஆனார். மன்னித்ததால்தான் இரண்டாம் யோவான் பவுல் மனிதருள் புனிதரானார். தன் கணவரையும் அருமையான இரண்டு குழந்தைகளையும் காரோடு எரித்தவர்களை மன்னித்ததால்தான் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஸ்டெயின்ஸின் மனைவி இன்னும் நினைவுகூரப்படுகிறார். நாம் ஒரு தவறு செய்தால் அதைப் பொருட்படுத்தக் கூடாது என்றும் எதிர்பார்ப்போம் ஆனால் அதையே வேறொருவர் செய்தால் பெரிதுபடுத்துவோம் நம்மைப் போலப் பிறரை நேசிக்கும் போது நமது வாழ்க்கை அழகாகத்தான் அமையும்.

மன்னிப்பு என்பது அவ்வளவு உணர்ச்சிகரமானது. சிறு குழந்தைகூட நமக்கு மன்னிப்பை கற்றுக் கொடுக்கும். குற்றத்தை மறக்க சொல்லித்தரும். மன்னிப்பு என்பது ஒரு கலை. அதை பழக்கப்படுத்தினால் மட்டுமே அது கைவசப்படும். தன்னை மன்னிப்பவரால்தான் பிறரையும் மன்னிக்கமுடியும். தான் தவறக்கூடியவன் என ஏற்றுக்கொள்கிறவர், தன்னை மன்னிக்கிறார். குற்ற உணர்விலிருந்து தப்பித்துக் கொள்கிறார். பிறரும் தவறக்கூடியவர்கள் என உணர்ந்து மன்னிப்பவர்கள்தான் உறவில் வளர்கிறார்கள். பிறரன்பில் வளர்கிறார்கள், மாமனிதர் ஆகிறார்கள். உண்மையில் ஒரு மனிதர் மாமனிதர் ஆகவேண்டுமென்றாலே அவர் மன்னிப்பவராக இருக்க வேண்டும்

இயேசுவே மாமனிதராக, ஏன்,இறைவனாக்கியது அவரின் மன்னிக்கும் பண்பே. இவர் பாவங்களை மன்னிக்கிறார் எனப் பரிசேயரும் சதுசேயரும் வியந்து போயினர்.விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணையும் மன்னித்து நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. இனி பாவம் செய்யாதீர் (யோகாவா8:11) என்கிறார்.மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு (மத்9:6).பாவம் செய்யாதே என்று சொன்னார்.

எனவே நாம் நம்மைச் சுற்றியிருக்கும் சுற்றத்தாரின் தவறுகளை மன்னித்தால் நாமும் மாமனிதராவோம். எல்லாத் தவறுகளையும் மன்னிக்க முடியாவிட்டாலும் முடிந்தவரை மன்னித்து வாழ்வோம். இறையேசுவின் சாட்சியாய் வாழ்வோம்.

–அருட்சகோதரி.



# கிச்சன் கார்னர்

## வெஜிடபிள் ரவா இட்லி



**தேவையான பொருட்கள்:**
பம்பாய் ரவை 1டம்ளர், தயிர் 2டம்ளர், கேரட் பட்டாணி 1 கப் சின்ன வெங்காயம் (நறுக்கியது) 1 கப், பச்சை மிளகாய் 1 கடலைப்பருப்பு 2 டீஸ்பூன், உளுந்தம்பருப்பு 1 டீஸ்பூன் கடுகு 1/2 டீஸ்பூன், முந்திரிபருப்பு 5, நெய் 1 டீஸ்பூன் எண்ணெய் 2 டீஸ்பூன் உப்பு தேவைக்கு

**செய்முறை :** வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு ரவையை நன்கு சிவக்க வறுத்து ஒரு பாத்திரத்தில் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு கடுகு, உளுந்தம்பருப்பு, கடலைபருப்பு, முந்திரிபருப்பு, தாளித்து அத்துடன் வெங்காயம், பச்சைமிளகாய்,காய்கறிகள் சேர்க்கவும்.

இந்த கலவையை வதக்கி ,வறுத்த ரவையில் கொட்டி தேவையான அளவு உப்பு சேர்க்கவும் .பின்பு நெய் ஒரு டீஸ்பூன் விட்டு தயிர் 2 டம்ளர் சேர்த்து ரவா இட்லி மாவு கலவை தயார் செய்து கொள்ளவும். தேவைபட்டால் அரைகப் தண்ணீர் சேர்த்து கட்டி இல்லாமல் கரைத்து இட்லி தட்டுகளில் எண்ணெய் தடவி, சிறிது கொத்தமல்லி இலை போட்டு அதன் மேல் ரவை கலவையை ஊற்றி ரவா இட்லிகள் தயாரிக்கவும். ( கேரட் பட்டாணி )தவிர வேறு காய்கறிகள் சேர்க்க தேவையில்லை .தேங்காய் சட்னியுடன் பரிமாற சுவையோ சுவை. கடையில் விற்கும் ரெடிமேட் இட்லிமிக்ஸ் வாங்கி ரவா இடலி தயாரிப்பதை விட வீட்டிலேயே காய்கறிகள் சேர்த்து ரவா இட்லி தயாரிக்கலாம்.

# டிப்ஸ்... டிப்ஸ்... டிப்ஸ்...

## பூவன்பழம்

மலச்சிக்கல் இருப்பின் உடம்பில் பல சிக்கல் உண்டாகும் .பூவன்பழம் மலச்சிக்கல் உண்டாகாமல் தடுப்பதோடு , மூலச்சூடு ஏற்படாமல் தடுக்கும் தோலை அரைத்து உடம்பில் தேய்த்து குளித்தால் காளாஞ்சிபடை என்னும் சோரியாசீஸ் தோல் நோய் குணமாகும்

## கருனைக்கிழங்கு


வாரம் ஒரு முறை கருனைக்கிழங்கு சாப்பிட மூல நோய் குணமாகும் . வாரம் இருமுறை சாப்பிட்டால் குண்டுடல் ஏற்படாமலும் ,இரத்தக்குழாய் தடிப்பு ஏற்படாமலும் தடுக்கலாம் .காறா கருனைக்கிழங்கு குழம்பு மருத்துவக்குணமிக்கது

– நன்றி தினத்தந்தி





# குட்டீஸ் கார்னர்

டியர் குட்டீஸ், கடந்த மாத புதிர் விளையாட்டுகள் பிடித்திருந்தது என்று நிறைய குட்டீஸ்களிடமிருந்து நன்றி மடல்கள் வந்திருந்தது. இந்த வாரமும் அதே போன்று இரண்டு புதிர் விளையாட்டுகள் இடம் பெற்றிருக்கின்றன. முயற்சி செய்யுங்கள்... புதிரை விடுவியுங்கள்...



இங்கே இருக்கும் இந்த குட்டிப் பாப்பாவுக்கு பள்ளிக்கு செல்ல வழி தெரியவில்லையாம். எங்கே நீங்கள் கொஞ்சம் வழிநடத்தி கொண்டு விடுங்களேன் ப்ளீஸ்....





அருகில் இருக்கும் இரண்டு படங்களுக்கும் இடையில் குறைந்தபட்சம்

**6**

வித்தியாசங்கள் உள்ளது.

**60** செகண்டுகளில் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்...

# மதன் மோகன் மாளவியா

அலகாபாத்தில் 1861 ஆம் ஆண்டு பிறந்த மாளவியா ஆசிரியராக பணியாற்றியவர் . 1886 ல் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசில் இவருடைய பேச்சை அனைவரும் பாராட்டினர் . அடுத்த ஆண்டு ஆசிரியர் வேலையை விட்டு இந்துஸ்தான் என்ற பத்திரிக்கையை தொடங்கி நடத்தினார் . அப்போது சட்டம் படித்துப் பட்டம் பெற்றார். 1902ல் மத்திய சட்ட சபை உறுப்பினர் ஆனார் . இவரது பெரும் முயற்சியினால் 1915 ல் காசி இந்து பல்கலைக்கழகம் உருவாயிற்று . 1909 ல் லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். காந்திஜி உப்பு சத்தியாகிரகம் செய்த போது சட்ட சபை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்து விட்டு அதில் கலந்து கொண்டார் . வட்டமேஜை மாநாட்டுக்கு காந்திஜி யுடன் சென்று வந்தார் வைதீகப் பற்றுள்ளவராயினும் தீண்டாமை ஒழிப்பில் தீவீரமாக இருந்தார் . சிறந்த தேசியவாதியாக திகழ்ந்த இவர் , 1946 ல் காலமானார் .



நன்றி. – புகழ்பெற்ற இந்தியர்கள்.

# ஒரு வரி உண்மைகள்



- இளகும் தன்மை அதிகம் கொண்ட உலோகம் தங்கம்
- மின்சாரம் பாய செம்பை விட வெள்ளி சிறந்தது
- தென்துருவத்தை 1911 ல் அடைந்தவர் அமுண்ட்சென்
- டைப்ரைட்டர் 1873 ல் தான் கண்டுபிடிக்கபட்டது
- உலகின் பெரிய சமுத்திரம் பசிபிக்
- I.C.S படித்த முதல் இந்தியர் சத்யேந்திரநாத் நாகூர்
- ஊரிகாம் சுரங்கம் தான் உலகில் ஆழமானது
- பெருலா செடி வெளியிடும் திரவமே பெருங்காயம்
- சென்னையில் மின்சார ரெயில் 1931 ல் வந்தது
- ஒளி புகக்கூடிய ஒரே உலோகம் மைகா.

– **K. சுடலைக்கண்ணு**, ஸ்ரீவைகுண்டம்

# வரவேற்கிறோம்

**இறை ஆசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்.**

| | | | |
|---|---|---|---|
| 1. ஆக்னஸ் ரூபினா | 06.01.13 | மரிய அந்தோணி பாஸ்கர்<br>மைக்கிள் பிளாரன்ஸ் | கொழுந்தட்டு |

# நூல்களின் மூலம் நாம் பெறுவது

**ஹிட்லர்,முசோலினி** போன்ற சர்வாதிரிகளின் வீழ்ச்சியைப் படிக்கும்போது ஆணவம் அதிகாரம் ஆகியவற்றின் பிரதி பலனை உணர்ந்து கொள்ள முடிகிறது

**இராபர்ட் புரூசின்** வாழ்க்கை விடா முயற்சியால் கிடைக்கும் வெற்றியை நமக்கு உணர்த்துகிறது

**சுவாமி விவேகானந்தரின்** நூல்கள் நமக்கு ஆன்மிக சக்தியை ஊட்டுவதோடு , மன ஊக்கத்தையும் ஊட்டுகின்றன

**பிளாரன்ஸ் நைட்டிங்கேல் ,** அன்னை தெரசாவின் வரலாறுகள் நமக்குக் கருணையைப் போதிக்கின்றன

**காந்தியடிகளின்** சத்திய சோதனை நூல் இவ்வுலக மக்களுக்கு அகிம்சையின் சிறப்பை உணர்த்துகின்றன

**வரலாற்று நூல்கள்** நாம் எதை நாட வேண்டும் எதை தவிர்க்க வேண்டும் என்பதை நமக்கு கற்பிக்கின்றன

**அசோகனின் சரித்திரம்** நம்மை அற வழியில் நடக்கச் செய்கிறது

**ஔரங்கச்சீப்பின் சரித்திரம்** நம்மை மத வெறியை வெறுக்கச் செய்கிறது

**ஷேக்ஸ்பியரின்** நூல்கள் புருட்டஸின் துரோகத்தை வெறுக்கச் செய்கிறது

–J.**ஜெனி,** பொற்பை.

# அன்னையே... எங்கள் அன்னையே...



அன்னையே எங்கள் அன்னையே
உம்மையே நாங்கள் எண்ணியே
அருளை அளிக்கும் தாயாக –
உம் ஆசியை பெறும் சேயாக – அன்னையே

பொற்பை நகர் வீதியிலே –
நீயும் பொங்கிடும் அன்புடன் மகிழ்வாக
சிங்காரத் தேரினிலே –
நீயும் சிரித்திடும் சேயுடன் நிறைவாக
ஆலயம் நின்ற அன்னையே –
உம் ஆசியைப் பெற்றிட வந்தோமே
என்றுமே நாங்கள் மகிழ்வாக –
வாழ வரம் தரும் அன்னையே நீ வாழ்க – அன்னை

நூற்றாண்டு தேர்பவனி –
சிறப்புடன் நிறைவேற்ற அருள்தந்த அன்னையே
பொற்பை நகரிலே எழுந்தருளி
பொங்கிடும் பெருமையை காத்தாயே
மழை பெய்து மக்கள் செழித்திட
மகிமை செய்வாய் மாமரியே
மழலைகள் என்றும் உருவாக
கிருபை செய்வாய் தாய் மரியே –அன்னை

–**சுகிர்தமணி அன்பரசன்,** கவரப்பேட்டை

# கவிதை மலர்கள்....

## கருணைக் கடலே இறைவா...

கருணைக் கடலாகிய இறைவனை
அருமையாய் எமக்கு ஈந்திட்ட
அன்பான திருக்கல்யாண அன்னையே
இன்பத்தை ஈயும் இமயமே
நூற்றாண்டு தேர் பவனியை
நூறாண்டு போற்றும் வண்ணம்
பதிவிற்குச் செல்லும் முன்
பக்தருக்கு அருள் செய்த
திருக்கல்யாணத் தாயே – நின்
திருவருள் அனைவருக்கும் தேவை


**–ஜோஸ்பின் மோரிதாசன்**
கவரப்பேட்டை

## நாமும் உயிர்த்தெழுவோம்...

இயேசுவின் உயிர்ப்பு
தெய்வீகத்தின் வெளிப்பாடு
சிலுவையில் தான் விண்ணேற்பு
சிறுமையில் தான் மீட்பு
வழிபடும் அனைவருக்கும்
நம்பிக்கையின் நல்லாயன்
துயருறும் மாந்தருக்கு
துணை நிற்கும் நண்பன்
நற்கனி தரும் மரமென
நானிலத்திலே பணியாற்றினால்
இறையரசு இங்கே மலரும்
இறப்பிலும் நாம் உயிர்ப்போம்

**–ஜெயந்தி சலேத்,** திசையன்விளை

# ஆல்பர்ட் ஐன்ஸ்டின்



1. உலக புகழ்பெற்ற இயற்பியல் விஞ்ஞானி .
2. யூதரான இவரின் தாய்நாடு ஜெர்மனி
3. ஜெர்மனியிலிருந்து குடிபெயர்ந்து அமெரிக்காவில் வசித்தார்
4. ஐன்ஸ்டனின் மிகச் சிறந்த கோட்பாடு சார்பியல் தத்துவம்
5. ஒளி மின் விளைவு ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்றார்
6. இவர் தந்த ஆற்றல் சமன்பாடு அணுகுண்டு தயாரிப்புக்கு அடிப்படை
7. உலக அமைதியை விரும்பிய விஞ்ஞானி
8. இஸ்ரேல் நாட்டு அதிபர் பதவியை ஏற்க மறுத்தவர்
9. காந்தியடிகள் மறைந்தபோது இனிவரும் தலைமுறையினர் இப்படி ஒரு மனிதர் வாழ்ந்தார் என்பதையே நம்ப மறுப்பார்கள் என்று தன் இரங்கல் செய்தியில் குறிபிட்டிருக்கிறார்
10. இந்திய விஞ்ஞானி சத்தியேந்திரநாத் போஸ் இவருடன் சேர்ந்து உருவாக்கியதே –ஐன்ஸ்டின் கண்டன்ட்

–நன்றி. **கையளவு களஞ்சியம்**

# அதிசய அன்னையே...!



அதிசயமான அன்னை
பொற்பை நகர் ,திருக்கல்யாண அன்னையின்
பொற்பாத நகரமான "அதிசயம்"!

திருமண வரம் வேண்டி வருவோர்க்கெல்லாம்
திருமண அருள் தந்து இமயமான அதிசயம்!

குழந்தை வரம் கேட்டு வந்தோர்க்கெல்லாம்
குழந்தை ஏசுவோடு அருள் பாலித்த அதிசயம்!


மாதம்தோறும் முதல்சனி வழிபாடு மெய்சிலிர்க்குதே
மாதரசி கல்யாண அன்னையின் பேரதிசயம்!
திருவிழா நாளிலே உம் பேரழகைக்காண அம்மா
தெருவெல்லாம் கண்கள் போதாத அதிசயம்!

தங்கத்தேரினிலே சதம் அடித்து தாரகைாய் பவனிவரும் போது
அங்கமெல்லாம் அருள் மழை பொழிய செய்த அதிசயமே!
அருள்தரும் இமயமே வாழ்க!

– **ஸ்டீபன் ராஜ்** (த.ஆ.ஒய்வு),கே.டி.சி நகர்.,

# உடலின் மந்திரி சபை

| | | |
|---|---|---|
| மூளை | – | பிரதம மந்திரி |
| காது | – | தந்தி ,தபால் துறை மந்திரி |
| கண் | – | நிதித்துறை மந்திரி |
| தலை | – | கல்வித்துறை மந்திரி |
| மூக்கு | – | சுகாதரத்துறை மந்திரி |
| பல் | – | தொழில்துறை மந்திரி |
| நாக்கு | – | ஒலி பரப்புத்துறை மந்திரி |
| தோள் | – | பாதுகாப்புத்துறை மந்திரி |
| கால் | – | போக்குவரத்துத்துறை மந்திரி |
| கை | – | தொழிலாளர் துறை மந்திரி |
| இதயம் | – | நீதித்துறை மந்திரி |
| வயிறு | – | உணவு,விவசாயத்துறை மந்திரி |
| நுரையீரல் | – | உள்த்துறை மந்திரி |



– **டென்சன்,** வெள்ளக்கோவில்

## இதய அஞ்சலி

| | | |
|---|---|---|
| 1.சந்தணசிலுவை | கொழுந்தட்டு | 9.2.13 |
| 2.மரிய ரோசம்மாள் | நவமுதலூர் | 11.1.13 |

# புனித தோமினிக் சாவியோ (1842-1857)



இவருடைய தாயும் தந்தையும் இவருக்கு இல்லத்தில் சிறந்த கல்விப்பயிற்சி அளித்து உத்தம கிறிஸ்தவ வாழ்வு நடத்தி இவருக்கு வழிகாட்டினார்கள். பங்குத் தநதை கடவுள் மீது பக்தியையும், தேவதாயின் மீது அன்பையும் இவரது உள்ளத்தில் ஊன்றினார். தோமினிக் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் ஐந்து மணிக்கு கோவிலுக்குப் போய் திருப்பலிக்கு உதவி செய்வார். பின்னர் கோவிலில் இருந்து பக்தி முயற்சிகளை அனுசரிப்பார். மழையானாலும், வெயிலானாலும், பனிக்கட்டி உறைந்திருந்தாலும் பயங்கர கோடை காலமாக இருந்தாலும் சிறுவனை எப்பொழுதும் குறிப்பிட்ட நேரங்களில் கோவிலில் காணலாம். கடவுளுக்கு சேவை செய்வது நமக்கு மகிழ்ச்சியை தருகிறது. கடவுளை மக்கள் நேசிக்கச்செய்வது வல்லமையுள்ள அப்போஸ்தல வேலையாகும். இவ்வுண்மைகளை நம் புனிதர் புனித ஜாண் போஸ்கோவிடமிருந்து கற்றுக்கொண்டார். “தோமினிக் போன்ற சிறுவன் தான் ஞானஸ்நானத்தில் பெற்றுக்கொண்ட தூய்மையை சாகும் வரை காப்பாற்ற வீரத்துடன் போர் புரிவானானால் அவன் உண்மையாகவே புனிதன்” என்று இவரைப் பற்றி திருத்தந்தை பத்தாம் பத்திநாதர் கூறினார். இவர் உத்தம கிறிஸ்தவ வாழ்வு நடத்தி தூய்மை, பக்தி, ஆர்வம் என்னும் மூன்று ஊற்றுக்களிலிருந்து பலம் பெற்றார் என்று திருத்தந்தை 11ம் பத்தினாதர் கூறினார். – நன்றி . **புனிதர்கள் வரலாறு**



## உலகின் மிகப்பெரிய அன்னை மரியா திருவுருவம்

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் ஒருரோ நகரில் லாபாஸ்க்குத் தெற்கிலுள்ள 12 ஆயிரம் அடி உயரமான மலையில் 149 அடி உயரமான அன்னை மரியா திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது .12 இலட்சம் டாலர் செலவில் எழுப்பபட்டுள்ள இந்த அன்னை மரியா திருவுருவம் பிரேசிலின் ரியோடி ஜெனிரோவிலுள்ள கிறிஸ்து மீட்பர் திருவுருவத்தைவிட 22 அடி உயரமானதாகும் .socavon அன்னை மரியா .சுரங்கத் தொழிலாளர்களுக்குப் பாதுகாவலியாகப் போற்றப்படுகிறார் . உலகின் மிகப்பெரிய அன்னை மரியா திருவுருவமாகவும் ,அந்நாட்டினர் மரபுகளை உறுதிப்படுத்தும் விசுவாசத்தின் செயலாகவும் இருக்கும் இத்திருவுருவத்தை லொண்டோ ரோக்கர் என்ற கலைஞர் வடிவமைத்துள்ளார் .

# நமது மக்களுக்கு
# ஒரு அரிய வாய்ப்பு

## கிராமிய அஞ்சலக ஆயுள் காப்பீடு(RPLI)

## முக்கிய அம்சங்கள் :

- நமது ஊரிலுள்ள அஞ்சலகத்திலயே சேர்ந்து பணம் செலுத்தவும் முதிர்வு தொகையை பெற்று கொள்ளவும் வசதி உள்ளது
- நம்பகமானது பங்கு மார்கெட்டை சார்ந்ததல்ல
- இத்திட்டத்திற்கு முகவர் கமிஷன் எதுவும் உங்கள் பிரிமீயத்தில் பிடித்தம் செய்ய படமாட்டாது
- 19 வயது முதல் 55 வயது வரை அனைவரும் சேர்ந்து கொள்ளலாம்
- மத்திய அரசாங்கமே பாலிசி பத்திரம் வழங்குவதால் எந்த சந்தேகமும் தேவையில்லை
- அதிக அளவில் போனஸ் வழங்கப்படுகிறது
- மற்ற காப்பீடு நிறுவனங்களை விட லாபம் அதிகமானது
- இந்தியாவில் எந்த அஞ்சலகத்திலும் பிரிமியம் கட்டலாம்
- நமது ஊரிலேயே உடனுக்குடன் எந்த விளக்கமும் பெற்றுக் கொள்ளலாம்

*இன்றைய முதலீடு!* *நாளைய பாதுகாப்பு!!*

### சேமிப்பு கணக்கு (S.B)

நமது அஞ்சலகத்தில் நமது மக்கள் அனைவரும் இன்றே புதிய சேமிப்பு கணக்கை(S.B) தொடங்கவேண்டும். அரசு வழங்கும் சலுகைகள் ,லோன் வசதி அனைத்தும் இனிமேல் அஞ்சலக சேமிப்புக் கணக்கு மூலமே வழங்கப்படஉள்ளது கடைசி நேரத்தில் முயற்சித்தால் நிறைய சிரமங்கள் ஏற்படலாம் தொடங்க 50 ரூபாய் போதுமானது நமது அஞ்சல் அலுவலகத்தை நமது ஊரிலேயே தற்காத்துக் கொள்ளவும் அது உதவும்.



*மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்க*

**S.D.அந்தோணி அருள்செல்வன்** B.A.,
போஸ்ட் மாஸ்டர், (BPM).பொற்பை நகர்
செல் : 9489194175

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியின் சரியான விடைகள்

**இடமிருந்துவலம் :** 1.யோவாக்கியம், 5.மனாசே , 9.நீதிக்கு, 3.ஆர்வம், 7.பொறாமை, 21.இறவானம், 25.முகில், 27.நன்மை
**வலமிருந்து இடம் :** 2.அக்கியோர், 6.லாபான், 10.கைம்பேறு, 14.அதிகாரம், 18.வெள்ளி, 22.ஊறறு, 26.சோதோம்
**மேலிருந்து கீழ் :** 3.அநீதியை, 7.உயிர்தெத்தாய், 11.எரிபலி, 15.கடும்தீர்ப்பு, 19.ஆற்றல், 23 மரம்
**கீழிலிருந்து மேல் :** 4.மீக்கா, 8.ஞானம், 12.ஆணிவேர், 16.அழியாமை, 20.தீமை ,24.சினம்

## கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

1. **D.ஜோஸ்பின் மேரிதாசன்** கவரப்பேட்டை
2. **சேசுதுரை ஜென்ஸி** கவரப்பேட்டை
3. **S.டோமினிக் பெனிட்டா** கவரப்பேட்டை
4. **A.அகஸ்டின் அனுஷா** கவரப்பேட்டை
5. **S.லூர்து ரெக்ஸ்** பொற்பை
6. **S.M.V.ராஜா** கொழுந்தட்டு
7. **அ. அமல பென்சி** கொழுந்தட்டு
8. **அ. அபிதா** கொழுந்தட்டு
9. **பிரின்ஸஸ் ஜேம்ஸ்** பொற்பை
10. **M.டேவிட் தேவராஜன்** வெள்ளக்கோவில்
11. **P.சந்தணத் திரவியம்** பொற்பை
12. **கபிரியேல் மேரி** பொற்பை
13. **A.புஷ்பராணி** பொற்பை
14. **A.மேரி ஷாலினி** பொற்பை
15. **G.ரெஜினாள் மேரி** பொற்பை
16. **குயின் ரோஸ் பாக்கியம்** பொற்பை
17. **S.ஜோஸ் பிரகாஷ்** பொள்ளாச்சி
18. **J.பீற்றர் ஜோசப்** சென்னை

# நினைவில் இருக்கட்டும்...

உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு தங்கும் வசதியுடன் கூடிய இலவசக் கல்வி பெற 9842062501 மற்றும் 9894067506 என்ற எண்களை அணுகவும்.

கண்வங்கி மற்றும் கண் தானத்திற்கு 044-28281919 மற்றும் 044-28271616 (சங்கர நேத்திராலயா கண்வங்கி) கண்தானம் செய்வது எப்படி எனத் தகவல்கள் அறிய கீழ்க்கண்ட இணையதள முகவரியை அணுகவும்.

குழந்தைகளுக்கு (1-10 Yrs) இலவச இருதய அறுவை சிகிச்சை Sri ValliBaba Institute, Bangaluru - 10. தொடர்பு எண் : 9916737471

தகவல் : **சா. அந்தோனி அன்பரசு,** திருச்சி.

## உயரமான ஒளி–ஒலிபரப்பு கோபுரம்



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஸ்கை ட்ரீ என்ற பெயரில், ஜப்பானிலே உயரமான மற்றும் உலகிலே இரண்டாவது உயரமான ஒளி-ஒளிபரப்புக் கோபுரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. டோக்கியோவின் மையப் பகுதியில் சுமிதா நகரத்தில் அமைந்துள்ள இந்த கோபுரத்தில் இதன் அடிப்பகுதியில் மிகப் பெரிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் மற்றும் வண்ண மீன்கள் அருங்காட்சியகமும் அமைந்துள்ளது இதன் சிறப்பம்சமாகும்.

# வாழ்வு தரும் வார்த்தைகள் – மார்ச் – 2013

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | புனித இரண்டாம் பெலிக்ஸ் | தொ.நூ. 37:3-4 | |
| | | 12-13a 17b-28a | மாற். 21:33-43,45-46 |
| 2. | | மீக்.7:14-15 18-20 | லூக். 1-3,11-32 |
| 3. | தவக்கால ஞாயிறு-3 | விப.3:1-8a, 13-15b | |
| | | 1கொரி 10:1-6, 10-12 | லூக்,13:1-9 |
| 4. | புனித கசிமீர் | 2அர 5:1-15 | லூக். 4:24-30 |
| 5. | புனித சிலுவை ஜாண் ஜோசப் | தானி 3:25,34-43 | மத். 18:21-35 |
| 6. | | இச.4:1,5-9 | மத். 5:17-19 |
| 7. | புனித பெர்பெத்துவா பெலிசித் | எரே. 7:23-28 | லூக்.11:14-23 |
| 8. | புனித இறை யோவான் | ஓசே. 14:2-10 | மாற்.12:28-34 |
| 9. | உரோமை புனித பிரான்சிஸ் | ஓசே.5:15-6:6 | லூக். 18:9-14 |
| 10. | தவக்கால ஞாயிறு - 4 | யோசு5:9-12-2 | |
| | | கொரி.5:17-21 | லூக். 15:1-3,11-32 |
| 11. | புனித யுலோஜியுஸ் | எசா. 65:17-21 | யோவா. 4:43-54 |
| 12. | புனித செராப்பினா | எசே.47:1-9,12 | யோவா. 5:1-3,5-16 |
| 13. | புனித யூப்ரசியா | எசா. 49:8-15 | யோவா. 5:17-30 |
| 14. | புனித மெற்றில்டா | விப 32:7-14 | யோவா. 5:31-47 |
| 15. | | சா.ஞா.2:1a,12-22 | யோவா7:1-2,10,25-30 |
| 16. | | எரே.11:18-20 | யோவா 7:40-53 |
| 17. | தவக்கால ஞாயிறு - 5 | ஏசா43:16-21 | |
| | | பிலிப் 3:8-14 | யோவா 8:1-11 |
| 18. | எருசலேம் நகர் புனித சிரில் | தானி. 13:41-62 | யோவா. 8:12-20 |
| 19. | புனித யோசேப்பு | 2சாமு.7:4-5a 12-14a,16 | |
| | | உரோ.4:13,16-18,22 | மத். 1:16,18-21,24a or |
| 20 | புனித கத்பெர்ட் | தானி. 3:14-20,91-92,95 | யோவா. 8:31-42 |
| 21. | புனித செராபியன் | தொ.நூ 17:3-9 | யோவா. 8:51-59 |
| 22. | | எரே 20:10-13 | யோவா 10:31-42 |
| 23. | புனித திபூர்சியூஸ் | எசே 37:21-28 | யோவா 11:45-46 |
| 24. | குருத்து ஞாயிறு | (பவனி:லூக்.19:28-40) | |
| | | எசா.50:4-7 பிலி2:6-11 | லூக்.22:-23:56 |
| 25. | புனித வாரம் | எசா.42:1-7 | யோவா12:1-11 |
| 26. | புனித லுட்ஜர் | எசா. 49:1-6 | யோவா 13:21-33,36-38 |
| 27. | | எசா. 50:4-9a | மத். 26:14-25 |
| 28. | புனித வியாழன் | வி.ப12:1-8,11-14 | |
| | | 1கொரி 11:23-26 | யோவா.13:1-15 |
| 29. | புனித வெள்ளி | எசா.52:13-53:12 | |
| | | எபி.4:14-16,5:7-9 | யோவா.18:1-19:42 |
| 30. | | | |
| 31. | உயிர்ப்பு பெருவிழா | தி.ப10:34,37-43 | |
| | | கொலோ 3:1-4 | யோவா. 20:1-9 |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி**
**சீராக்**
**அதிகாரம் 1 முதல் 44 வரை.**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.03.2013**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 5 | | | |
| 21 | | 9 | | | | | | | 6 |
| | 19 | ■ | | | | 14 | | | 7 10 |
| | | | | 13 | | | | | |
| 3 8 | | 20 | 24 | 17 | | | | | |
| | | | | | | 18 | 15 | 11 | |
| | | 23 | | | | 22 | | | |
| | | | | | 25 | | | | |
| | | | 16 | | | 26 | | | |
| | | | | 2 12 | ■ | ■ | | | 4 |

## இடமிருந்து வலம்

1. பாவிகளுக்கு அருவெருப்பைத் தருவது எது?
5. நண்பர் தொகையைப் பெருக்குவது எது?
9. கஞ்சனுக்கு எது ஏற்றதல்ல?
13. மனிதரை எது பரிசோதிக்கின்றது?
17. மூடரின் உணர்வுகள் எது போன்றவை?
21. எது இல்லையென்றால் உடைமை கொள்ளையடிக்கப்படும்?
25. ஆண்டவரின் கட்டளைப்படி .......................பெய்கிறது.

## வலமிருந்து இடம்

2. தந்தையரை மதிப்போருக்கு தங்கள் பிள்ளைகளால் என்ன கிட்டும்?
6. நம்பிக்கைக்குரிய நண்பர்கள் பாதுகாப்பான..............போனறவர்கள்.
10. இறைப் பற்றுள்ளோரின்......................... வீண் போகாது.
14. தன்னைக் கடைபிடிப்போரிடம் குடிகொள்வது எது?
18. உன் .................. உன்னிடம் கேட்பதே மேல்.
22. யார் புகழால் நிரப்பப்படுவார்?
26. நிறைவுள்ளவராகவும், நீதிமானாகவும் திகழ்ந்தவர் யார்?

## மேலிருந்து கீழ்

3. வாய்மொழியால் வெளிப்படுவது எது?
7. எதிர்பாராதோர் என்ன புனைந்தனர்?
11. உதடுகளை முத்திரையிட்டு மூடுவது எது?
15. அடக்கமான மனிதர்களுக்குமுன் அவர்களது...............செல்கிறது.
19. பொய்மையின்றி நிறைவேறுவது எது?
23. இரக்கம் என்பது நலமிகு............................. போன்றது.

## கீழிருந்து மேல்

4. உனக்குத் தெரிந்தால் ................................கூறு.
8. இறைப்பற்றுள்ளோருக்கு ...................... செய்.
12. பரந்த பட்டறிவு முதியோருக்கு எதுவாகத் திகழ்கிறது?
16. எது வைப்போர் அதிலே பிடிபடுவர்?
20. ஆண்டவர் எத்தனை மடங்கு திருப்பித் தருவார்?
24. ஆண்டவருக்கு வாயார ............................ பாடுங்கள்.